## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## அரியலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(09.02.2022 முதல் 13.02.2022)

**அறிக்கை எண்: 11/2022** **தேதி : 08.02.2022**

### அரியலூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 33 °செ முதல் 37 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 21 °செ முதல் 24 °செ ஆகவும் பதிவானது.

### அரியலூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (09.02.2022 முதல் 13.02.2022)

| கடந்த வார வானிலை (04.02.2022 முதல் 07.02.2022) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (09.02.2022 முதல் 13.02.2022) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 04/02 | நாள்-2 05/02 | நாள்-3 06/02 | நாள்-4 07/02 | தேதி | நாள்-1 09/02 | நாள்-2 10/02 | நாள்-3 11/02 | நாள்-4 12/02 | நாள்-5 13/02 |
| 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 33 | 37 | 35 | 34 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 33 | 33 | 33 | 33 | 34 |
| 21 | 24 | 23 | 22 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 22 | 23 | 23 | 24 | 24 |
| 4 | 6 | 5 | 5 | மேகமூட்டம் (ஆக்டா) | 1 | 1 | 3 | 3 | 2 |
| 83-40 | 83-49 | 87-45 | 79-51 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70-45 | 70-45 | 70-50 | 70-50 | 70-50 |
| 8 | 9 | 12 | 15 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 6 | 6 | 6 | 6 | 6 |
| கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | காற்றின் திசை | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | வட கிழக்கு |

### அரியலூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். 09.02.2022 முதல் 13.02.2022 வரை மழை இல்லை. அதிகபட்ச வெப்பநிலை 34 °செ முதல் 34 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 22 °செ முதல் 24 °செ ஆகவும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 6 கி.மீ. அளவுக்கு பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| நெல் | | அறுவடை செய்த நெல் விதைகளை தற்போது நிலவும் வறண்ட வானிலையை பயன்படுத்தி நன்கு காய வைத்து ஈரத்தன்மை 13 சதவீதத்திற்கு கீழ் இருக்குமாறு சேமித்து வைத்து பூச்சிகள் இல்லாமல் பாதுகாக்கவும். |

| | | |
|---|---|---|
| உளுந்து | | உளுந்து பயிரில் நோய் தாக்கத்தை கட்டுப்படுத்த விதைகளை கார்பன்டெசிம் 2 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்கவும். |
| நெல் | | தாளடி நெற்பயிர்களில் இலை மடக்குப்புழு மற்றும் குருத்துப் பூச்சிகளின் தாக்கும் ஏற்படவாய்ப்புள்ளது. இதனைக் கட்டுப்படுத்த கார்டார்ப் ஹைட்ரோ குளோரைடு 4 சத குருணைகளை ஏக்கருக்கு 6 கிலோ என்ற அளவில் சம அளவு மணலுடன் கலந்து இடவும். அல்லது குளோரிபைரிபாஸ் ஏக்கருக்கு 400 மிலி என்ற அளவில் தெளித்துக் கட்டுப்படுத்தவும். |
| கால்நடைகளுக்கு | மாடு | இரவில் குளிர்ந்த காற்று வீசுவதால் கால்நடைகளை குறிப்பாக இளம் குட்டிகளை தகுந்த கொட்டகைகளில் அடைக்கவேண்டும். மேலும் வெப்பமூட்டிகள் (எ.கா. குண்டு பல்பு) பொருத்தினால் நுரையீரல் அழற்சி ஏற்படாது. |

## குறுஞ்செய்தி

அறுவடை செய்த நெல் விதைகளை தற்போது நிலவும் வறண்ட வானிலையை பயன்படுத்தி நன்கு காய வைத்து ஈரத்தன்மை 13 சதவீதத்திற்கு கீழ் இருக்குமாறு சேமித்து வைத்து பூச்சிகள் இல்லாமல் பாதுகாக்கவும்.

**இயக்குநர்**